| அனுப்புநர்<br>திருமதி.வ.தமிழ்செல்வி<br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்<br>பழங்குடியினர் நல அலுவலர்<br>காஞ்சிபுரம். | பெறுநர்<br>அனைத்து சுயநிதி கல்லூரி முதல்வர்கள்<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
|---|---|

ந.க.எண்.22314/2017/ஜே3, நாள்.27.11.2017

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்- | ஆதிதிராவிடர் நலம் - காஞ்சிபுரம் மாவட்டம் - போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை - 2017-18-ம் கல்வி ஆண்டு - அனைத்து சுயநிதி கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள SC/ST/SCC மாணவர்கள் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தலின் போது வருமான சான்று சமர்ப்பித்தல் - சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட விவரங்கள் அனுப்புதல் - சார்ந்து. |
| பார்வை- | சென்னை, ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம்.ந.க.எண்.எல்2/17408/ 2017, நாள்.15.11.2017. |

--------

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள, அனைத்து சுயநிதி கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள SC/ST/SCC மாணவர்கள் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் போது வருமான சான்று சமர்ப்பிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டிய விவரங்கள் பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு-

| | |
|---|---|
| * | மத்திய அரசின் போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற மாணவர்களின் பெற்றோர்/ பாதுகாவலரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். |
| * | மாநில அரசின் சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். |
| * | தமிழகத்தில் உள்ள அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி கல்லூாயில பயிலும் SC/ST/SCC மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் |

| | |
|---|---|
| | அம்மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் மத்திய அரசின் கீழ் பணிபுரிந்தால் அவர்கள் பணிபுரியும் அலுவரிடமிருந்து வருமான சான்றும் (Pay Slip) , மேலும் வருவாய்துறையிடமிருந்து வருமான சான்றும் (Income from all Source-HRA நீங்கலாக) கட்டாயம் அளிக்க வேண்டும். |
| * | பெற்றோர்/பாதுகாவலர் மாநில அரசின் கீழ் பணிபுரிந்தால் அவர்கள் பணிபுரியும் அலுவரிடமிருந்து வருமான சான்றும் (Pay Slip) , மேலும் வருவாய்துறையிடமிருந்து வருமான சான்றும் (Income from all Source-DA நீங்கலாக) கட்டாயம் அளிக்க வேண்டும். |
| * | கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தால் அம்மாணவர்கள் கல்வி நலன் கருதி மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.இத்திட்டத்தில் பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். அவ்வாறு இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் தமிழக அரசு ஊழியராக இருந்தால் அவர்கள் பணிபுரியும் அலுவலரிடமிருந்து வருமான சான்று (Pay Slip) மற்றும் வருவாய் துறையிடமிருந்து வருமான சான்றும் கட்டாயம் அளிக்க வேண்டும். |

மேற்படி நெறிமுறைகளை முறையாக பின்பற்றுமாறு, கேட்டுக் கொள்ளப்படுகிறது.

27/4/17

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்
காஞ்சிபுரம்.

நகல்-
இயக்குநர்
ஆதிதிராவிடர் நலத்துறை
சென்னை-5- தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

27/4/17